3. கவன ஈர்ப்பு.

திண்டுக்கல் நகராட்சியிலுள்ள மேல்நிலைப்பள்ளிகளில் பணிபுரியும் முது நிலைப் பட்டதாரி ஆசிரியர்களுக்கு மூன்றாவது, நான்காவது கால ஊதிய உயர்வு அளிக்காததால் ஏற்பட்டுள்ள இடையூறு குறித்து.

திரு. பா. ரா. தாமஸ்: மாண்புமிகு தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :—

"பணி விதிகள் இல்லாததால் திண்டுக்கல் நகராட்சியிலுள்ள மேல் நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் முதுநிலைப் பட்டதாரி ஆசிரியர்களுக்கு மூன்றாவது, நான்காவது கால ஊதிய உயர்வு அளிக்காததால் ஏற்பட்டுள்ள இடையூறு குறித்தும் வருமான இழப்பு குறித்தும்".

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு தலைவர் அவர்களே, விவர அறிக்கை @ ஒன்று அவை முன் வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. பா. ரா. தாமஸ்: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நான்காவது கால ஊதிய உயர்வு அளிக்க ஆணையிட்டமைக்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் ஐந்தாவது கால ஊதிய உயர்வும் பெறத் தகுதியுள்ளவர்களாக இருக்கிறார்கள். இது குறித்தும் ஆணையிடுவார்களா என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, நான்காவது ஊதிய உயர்வு அவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை என்பதற்காகத்தான் கவன ஈர்ப்புத் தீர்மானமே கொண்டுவரப் பட்டிருக்கிறது. ஆனால் மீண்டும் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் மூலமாக, இதுபோன்று ஐந்தாவது ஊதிய உயர்வும் அவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்தால், அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

திரு. பா. ரா. தாமஸ்: தலைவர் அவர்களே, ஏற்கெனவே அரசுப் பள்ளி களிலே பணிவிதி முறைகள் வகுக்கப்பட்டு அவர்களுக்குத் தொடர்ந்து ஊதிய உயர்வு வழங்கப்படுகிறது. ஆனால் நகராட்சி நிர்வாகத்துக்கு உட்பட்ட மேல் நிலைப்பள்ளிகளிலே, நகராட்சி மேல்நிலைப் பள்ளிகளினுடைய பணி விதிகள்

@ 88 ஆம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

இன்னும் வகுக்கப்படவில்லை என்று சொல்கிறார்கள். அவ்வாறு நகராட்சி மேல்நிலைப் பள்ளிகளினுடைய பணி விதி முறைகள் வகுக்கப்பட்டு விட்டால், இந்தத் தடை ஏற்படாது. அந்தப் பணி விதி முறைகளை எப்போது வகுக்க இருக்கிறார்கள்? விரைவில் அது குறித்து ஆணையிடுவார்களா என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, அதற்குரிய பணி விதிகளை உடனடியாக அமைக்கும்படி நான் செயலாளர் போன்றவர்களை எல்லாம் கேட்டுக்கொண்டிருக்கிறேன். நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

(முற்பகல் 10-20)

4. அரசின் தீர்மானம்.

தமிழ் நாட்டில் தொழிலாளர்கள் நிலைமைபற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு தலைவர் அவர்களே,

"சட்டமன்ற மேலவையின் முன் வைக்கப்பட்டுள்ள தமிழ் நாட்டில் தொழிலாளர்கள் நிலைமை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு @ பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டமன்ற மேலவையின் முன் வைக்கப்பட்டுள்ள தமிழ் நாட்டில் தொழிலாளர்கள் நிலைமை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

திரு. ஆ. நல்லசிவன் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் வைத்துள்ள கொள்கை விளக்கக் குறிப்பின் மீது கட்சியின் சார்பில் என் கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். அதிலும் குறிப்பாக பேரவையிலே இந்த மானியத்தின்மீது

@ 89-171 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.